**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**நாள்.03.07.2025**

**O.S. No. 37/2020**

**வா.சா.1** – **முத்துமாரி**

**4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

என்ன பரிகாரம் கேட்டு வழக்குப் போடப்பட்டுள்ளது என்றால் 3-1/2 சென்ட்டுக்காக வழக்குப் போட்டுள்ளேன். வழக்குச் சொத்தினுடைய சர்வே எண் என்னவென்றால் தெரியாது. வழக்கில் சொல்லியுள்ள சர்வே எண்.399/1C வருவாய்த்துறையில் 1வது பிரதிவாதி பேரின்பம் பெயரில் பட்டா உள்ளது என்றால் என் பெயரில் உள்ளது. வழக்கில் சொல்லியுள்ள சர்வே எண்.399/1C என் அப்பா பெயரில் உள்ளதா என்றால் என் பெயரிலிருந்து என் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது. வழக்கில் சொல்லியுள்ள சர்வே எண்.399/1C என் பெயருக்கு உள்ள பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன் பட்டா இல்லை. என் பெயரில் வழக்குச் சொத்துக்கு பட்டா கிடையாது என்றால் சரிதான் 1வது பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளது. 1வது பிரதிவாதி பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்யக்கேட்டு கோட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளேனா என்றால் ஆமாம். மேற்படி கோட்டாட்சியரை இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சேர்த்துள்ளேன். வட்டாட்சியர் என் அப்பா தவறாக பத்திரம் எழுதியுள்ளார் என கூட்டுப்பட்டாவில் இருந்த பெயரை நீக்கிவிட்டார் என்றால் சரிதான். அதனால் கோபம் கொண்டு 4 வது பிரதிவாதியை கட்சியாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 1வது பிரதிவாதி பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்ய கோட்டாட்சியரிடம் முறையாக மனுசெய்யாமல் நீதிமன்றத்தில் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருப்பது தவறு என்றால் சரியல்ல. 4 வது பிரதிவாதி உரிய ஆவணங்களின்படி தான் பட்டா மாறுதல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தற்போது வரை வழக்குச் சொத்தின் சர்வே எண் பட்டா 1 வது பிரதிவாதி பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான்.

நான் வழக்கில் வட்டாட்சியர் பாஸ்கர், 1வது பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து பட்டா கொடுத்ததாக சொல்லியுள்ளேன் ஆனால் மேற்படி பாஸ்கரை இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். தமிழக அரசை இந்த வழக்கில் கட்சி சேர்க்காததால் அவசியத் தரப்பினரை சேர்க்காத காரணத்தால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் சொத்து குறித்து உரிமை மூலம் தொடர்பாக பிரச்சனை இருப்பதால் 4 வது பிரதிவாதி இவ்வழக்கில் கட்சி சேர்த்திருப்பது சரியானது அல்ல 4 வது பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.07.03 19:02:52 +0530